**தலைப்பு 020 – தேர்தல்கள் ஆணைக்குழு**

---------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 020 – தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கம்பனிகள் பதிவாளர் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்

கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவதினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**நிதி அல்லாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது முறையே கிரயம் ரூபா 6,717,017 தொகை மற்றும் ரூபா 1,380,261 தொகைக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களை இனங்கண்டு குறிப்பிட்ட நிதி அல்லாத சொத்துக் கணக்குகளிலிருந்து அகற்றியிருக்காமையால் அந்த பெறுமதியினால் நிதி அல்லாத சொத்துக்களின் மீதி மிகையாக காட்டப்பட்டிருந்தது. அதேபோல், முன்னைய ஆண்டிற்கு முன்னரும் இவ்வாறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்களின் குறியீட்டு இலக்கம் மற்றும் பெறுமதி CIGAS தரவு முறைமையில் குறியீட்டு இலக்கம் மற்றும் பெறுமதியுடன் இணங்கியிருக்காமையால் அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்களின் கிரயம் நிதி அல்லாத கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. விரைவாக நாளதுவரை ஆக்கி கணக்காய்விற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்களை இனங்கண்டு உரிய பெறுமதியினை நிதி அல்லாத சொத்துக்களின் மீதியில் இருந்து அகற்றப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அப்புறப்படுத்தியிருந்த போதிலும் அந்த பெறுமதிகளும் நிதி அல்லாத சொத்துக்கள் கணக்கில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | | |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க செலவு மதிப்பீடு தயாரிக்கப்படாமையால் 02 மூலதனச் செலவு விடயங்களுக்காக முறையே ரூபா 50,000,000 தொகை மற்றும் ரூபா 5,000,000 தொகைக்கான தேறிய ஏற்பாடுகளில் இருந்து சேமிப்புக்கள் முறையே ரூபா 38,740,095 தொகை மற்றும் ரூபா 1,144,485 தொகையாக 77 சதவீதமும் மற்றும் 23 சதவீதமும் காணப்பட்டது. | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை 02/2023 இன் படி அத்தியவசியமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் முன்னேற்றுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தது. யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் புதிய கட்டிடத்தின் முதலாவது கட்டத்தின் வேலையை பூர்த்தி செய்வதற்கு முன்னர் அலுவகத்தை திறந்து இரண்டாம் கட்டத்தை ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், திறத்தல் தாமதமடைந்தமையால் மற்றும் இரண்டாம் கட்டத்தின் நிர்மாண வேலைக்காக ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தமையால் இந்த ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது. | 2023 செலவு மதிப்பீடு தயாரிக்கும் போது 03/2022 சுற்றறிக்கை தொடர்பாக கவனம் செலுத்து நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அனுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 94(1) இற்கு இணங்க வருடாந்த மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடுகள் காணப்பட்டால் அன்றி வேலை ஒன்று சேவையொன்று வழங்குவதற்காக ஏதேனும் செலவொன்றுக்கு அல்லது ஈடுபாட்டுப் பொறுப்பொன்றுக்கு ஆளாகக்கூடாத இருந்த போதிலும், ஆணைக்குழு அதற்கு முரணாக 04 | நி.பி. 94(2) மற்றும் நி.பி. 94(3) இற்கு இணங்க அலுவல விடயங்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு பேணிச் செல்வதற்கு மேற்கூறிய பொறுப்புக்களுக்கு அணுக நேரிட்டது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

செலவு விடயங்களுக்காக ரூபா 9,282,806 இற்கான பொறுப்புக்களுக்கு அனுகியிருந்ததுடன், அதன் காரணமாக அந்த செலவு விடயங்களின் ஏற்பாடுகளில் சேமிப்புக்களை மிகைத்த பொறுப்புக்கள் ரூபா 8,770,087 தொகையாக இருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2016 திசெம்பர் 06 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | ஆணைக் குழுவின் 47 வாகனங்கள் தொடர்பாக சுற்றிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | தற்போது தலைமை அலுவகத்தில் 04 வாகனங்கள், மாவட்ட அலுவலகங்களில் 12 வாகனங்களுக்கான எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் , மீதியான வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். |
| (ii) | 2008 ஜுன் 28 திகதிய 13/2008 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 04 மற்றும் 2023 ஜனவரி 27 திகதிய 01/2023 இலக்கம் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் பந்தி 2(இ)(iv) | சுற்றறிக்கைக்கு இணங்க ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு உரித்தான எரிபொருள் வரையறையை மிகைத்து 2023 ஆண்டு ஒதுக்கப்பட்ட 03 வாகனங்களுக்காக எரிபொருள் 1238.5 லீற்றர் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | இந்த வாகனங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தேர்தல் ஆணையாளர் நாயகம் மற்றும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்களாகும். தலைவர் மற்றும் ஆணையாளர் நாயகம் நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் தேர்தல் ஆணைக் குழுவை பிரதிநிதிப் படுத்தி நாடு பூராகவும் இருந்து |

| | | |
|---|---|---|
| | | அழைப்புக்கள் கிடைக்கப் பெறல் மற்றும் தேர்தல் விரிவுரைகள், செயலமர்வுகள் போன்ற அத்தியவசியமாக பங்குபற்ற வேண்டிய சந்தர்ப்பங்களுக்காக மற்றும் 2023 ஜனவரி மாதத்தில் தேர்தல் நடாத்துதல் வெளியிடப்பட்டதனால் இந்த விடயங்களுக்காகவும் மேலதிக எரிபொருள் வழங்கப்பட்டன. அதேபோல், பிரதான உள்ளகக் கணக்காய்வாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனம் கணக்காய்வு அலுவலகங்களுக்காக மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு அந்த பிரிவின் உத்தியோகத்தர்களுடன் செல்லும் சந்தர்ப்பங்களில் மேலதிக எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. அந்தச் சந்தர்ப்பங்களில் பல உத்தியோகத்தர்கள் பிரயாணம் செய்வதனால் அதனை தொகுதிப் போக்குவரத்து என கணித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | டிஜிடல் கொபி பிரிண்டர் (DCP) 02 இயந்திரங்கள் கொள்வனவு செய்யும் பெறுகை | | |
| | (i) 2023 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தின் படி டிஜிடல் கொபி பிரிண்டர் (DCP) 02 | இந்த கொள்வனவு செய்யும் அலுவல்களை பூர்த்தி செய்ய முடியாமல் போனது விலைகூறல் அழைப்பில் கொள்னவு செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளாமல் | குறிப்பிட்ட பெறுகைத் திட்டத்தின் கால வரையறையின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இயந்திரங்கள் கொள்வனவு செய்யும் பெறுகை அலுவல்கள் 2023 ஜுன் 30 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இயந்திரங்களை கொள்வனவு செய்யும் அலுவல்கள் 2023 நவம்பர் 21 திகதியே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | மீண்டும் கூறுவிலைகளை அழைப்பதற்காக பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் மீது செயற்பட்டமையாலே என குறிப்பிடுகின்றேன். | |
| (ii) டிஜிடல் கொபி பிரிண்டர் (DCP) 02 இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக சந்தை விலை நிர்ணயிக்கும் முறையின் கீழ் 2023 மே 16 திகதி 08 பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்ததுடன், 04 வழங்குனர்களிடம் கூறுவிலைகள் கிடைத்திருந்தது. பெறுகையை திட்டமிட்ட சந்தர்ப்பத்தில் இயந்திரத்தின் விவரக்குறிப்புக்களை சரியாக இணங்கண்டிருக்காமையால் மீண்டும் முன்னைய வழங்குனர்களிடமே கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்தது. வழங்கும் நிறுவனங்கள் முதலாவது கூறுவிலைகள் அழைத்த போது குறைந்த விலை ரூபா 805,000 தொகை எனவும், மற்றும் இரண்டாம் முறை கூறுவிலை அழைத்த போது ரூபா 1,035,000 தொகை என சமர்ப்பித்திருந்தமையால் இந்த பெறுகையின் போது உரிய முறையில் இயந்திரத்தின் விவரக் குறிப்புக்களை இனங்காணப்படாமையால் ரூபா 230,000 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | கிடைத்திருந்த கூறுவிலைகளை மதிப்பாய்வு செய்த போது F4 கடதாசியின் அளவு மாத்திரம் அச்சிடக்கூடிய இயந்திரமொன்றுக்காக கூறுவிலைகள் கிடைக்கப் பெற்றிருந்தமையால் மற்றும் அந்த கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்த ஏனைய 03 கூறுவிலைகளுக்கு ஒப்பாக 1/3 விட குறைவாக பெறுமதியொன்றை கொண்டிருந்தது என தோன்றியமையால் அந்த தேவைப்பாட்டிற்காக மாத்திரம் அச்சிடுதல் பொருந்தும் எனின் அதன் கீழ் மீண்டும் கூறுவிலைகள் அழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையால் கூடிய நிதி அனுகூலமொன்று கிடைப்பதனால் அவ்வாறு பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, இரண்டாவது விலை அழைப்பின் போது இயந்திரத்தின் விலை ரூபா 100,000 தொகை இனால் (VAT இன்றி) கூடிய பெறுமதியொன்றினை கொண்டிருந்தது. எனினும் அந்த சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறைந்த விலை அதுவாக இருந்தது. அதன்படி, 02 இயந்திரங்களுக்காக முதலாவது விலைகூறல் அழைப்பின் விலையை VAT உடன் ரூபா 230,000 இற்கான தொகையொன்று செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | பெறுகைகள் திட்டமிடும் சந்தர்ப்பத்தில் இயந்திரங்களின் விவரக் குறிப்புக்கள் சரியாக இனங்காண வேண்டும். |

(ஆ) தலைமை அலுவலகத்திற்கு மேலதிக மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று மற்றும் எரிபொருள் தொட்டியொன்று கொள்வனவு செய்யும் பெறுகை

| | | |
|---|---|---|
| (i) 2022 ஆண்டின் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மின் பிறப்பாக்கி இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு மற்றும் அதன் எடுத்து வந்து பொறுத்துவதற்காக குறிப்பிட்ட வழங்குனரினால் ரூபா 6,289,650 இற்கான வரி இன்றிய விலையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்தப் பெறுமதியில் எரிபொருள் தொட்டி (Bulk Storage Fuel Tank) மற்றும் அதனை பொருத்துவதற்காக ரூபா 734,500 இற்கான செலவும் உட்படுத்தப்பட்டிருந்தது. 2023 ஜனவரி 14 திகதி மின்பிரப்பாக்கி இயந்திரத்தை பொறுத்தும் போது எரிபொருள் தொட்டி பொறுத்தப்பட்டிருக்காமையால் பெறுகையின் வரி இன்றிய விலை ரூபா 5,555,150 தொகையாக இருந்தது. எனினும், இயந்திரத்தை பொறுத்தும் இடம் பின்னர் மாற்றப்பட்ட காரணத்தினால் குறிப்பிட்ட வழங்குனருக்கு 2023 ஏப்ரல் 17 திகதி இறுதி பில் பத்திரம் கொடுப்பனவு செய்யும் போது ரூபா 6,010,800 தொகை வரி இன்றி செலுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 455,650 தொகை ஆணைக்குழுவிற்கு மிகையாக செலுத்த நேரிட்டிருந்தது. | குறிப்பிட்ட கூறுவிலையும் பெறுகையும் விவரக் குறிப்புக்கள் பரிசோதனையின் பின்னர் மதிப்பாய்வுக்குழு வழங்கியிருந்த பரிந்துரையின் மீது வரியின்றிய தொகையாகிய ரூபா 6,289,650 கீழ் அந்த நிறுவனத்திலிருந்து கருமத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக பொறுகைக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு அதன்படி, கட்டளை வழங்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் மாதம் மின் பிறப்பாக்கி இயந்திரத்தை வழங்கி அதனை பொறுத்தி முடிவுறுத்தி இன்வொயிஸ் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அப்போது காணப்பட்ட ஏற்பாடுகளின் சேமிப்பின் மீது 2022 திசெம்பர் மாதத்தில் ரூபா 4,767,000 தொகைக்கான காசோலையொன்று எழுதி வைக்கப்பட்டதுடன், அதனை குறிப்பிட்ட நிறுவனத்திற்கு 2023.01.17 திகதி வழங்கப்பட்டிருந்தது. | வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) மேலதிக எரிபொருள் தொட்டியொன்று பொறுத்துவதற்காக இன்வொயிஸ் வழங்கும் நிறுவனத்தினால் 2022 திசெம்பர் 20 திகதி மீண்டும் | மேலதிக எரிபொருள் தொட்டிக்கான இன்வொயிஸ் வழங்கப்பட்டிருந்த போதிலும், எரிபொருள் தொட்டியை பொறுத்தி பூர்த்தி செய்யும் வரை அதற்கான கொடுப்பனவு | பண்டங்கள் கொள்வனவு செய்யும் போது தேவைப்பாட்டினை உரிய முறையில் முன்கூட்டியே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பித்திருந்த போதிலும் அந்த தொட்டி 2023 ஆகஸ்ட் 15 திகதி அதாவது, 08 மாத கால தாமத்தின் பின்னர் பொறுத்தப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான கொடுப்பனவு 2023.10.28 திகதியே செய்யப்பட்டது. இந்தக் காலப் பகுதியில் மின்சாரம் வழங்கல் வழமையான நிலைமைக்கு மாறியிருந்தமையால் மின் பிறப்பாக்கி செயற்படுத்தும் தேவை ஏற்படாமையால் எரிபொருள் தொட்டியை பொறுத்துவதில் தாமதம் அதற்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. | |
| (iii) | 2022 ஆண்டு நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தொடர்ச்சியான மின்துண்டிப்பு ஏற்படும் போது அணைக்குழுவின் தரவு நிலையத்திற்கு தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க வேண்டிய தேவைப்பாட்டிற்காக மேலதிக மின் பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் மேலதிக எரிபொருள் தொட்டி கொள்வனவு செய்திருந்த போதிலும் அந்த பெறுகையின் தாமத்தின் காரணமாக 2023 திசெம்பர் அளவிலும் மின் பிறப்பாக்கி மற்றும் மேலதிக எரிபொருள் தொட்டி பயன்படுத்தும் தேவைப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டு மற்றும் 2023 ஆண்டின் ஆரம்ப அறையாண்டில் நிலவிய மின்சார துண்டிப்பு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு மீது தரவு நிலையத்திற்கு தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கும் குறிக்கோளுடன் இந்த மின்பிறப்பாக்கி மற்றும் எரிபொருள் தொட்டி பொறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறிப்பிட்ட பொறுத்திய பின்னர் மின்வெட்டு ஏற்படாமையால் அதனை பயன்படுத்தும் தேவைப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை. எனினும், எதிர் காலத்தில் அவ்வாறு நிலைமையொன்று ஏற்பட்டால் இந்த மின்பிறப்பாக்கி இயந்திரத்தை பயன்படுத்த நேரிடக்கூடும். | பெறுகை அலுவல்கள் குறிப்பிட்ட கால வரையறையுள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (இ) | கேகாலை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்காக மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று பொறுத்தும் பெறுகை | | |
| (i) | கேகாலை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்காக மின்பிறப்பாக்கி இயந்திரமொன்று 2020 திசெம்பர் 30 திகதி ரூபா 1,720,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இயந்திரத்தை நிறுவன வளாகத்தில் 2023 ஜனவரி 05 திகதி பொறுத்தப்பட்டிருந்தது. அதாவது இயந்திரம் | கேகாலை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் புதிய கட்டிடம் நிர்மாணிக்கும் போது ஏற்பட்டிருந்த செய்முறைசார் சிக்கல் மற்றும் தாமதத்தின் காரணமாக இந்த மின்பிறப்பாக்கி இயந்திரத்தை பொறுத்துதல் தாமதம் அடைந்திருந்ததுடன், அது ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்கு அப்பால்பட்ட விடயமொன்றென குறிப்பிடுகின்றேன். | தேவைப்பாட்டினை அறுதியாக இனங்கண்டு பெறுகை அலுவல்கள் குறிப்பிட்ட காலப் பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்து 02 வருடங்களுக்கு பின்னராகும். | | |
| (ii) | இயந்திரம் கொள்வனவு செய்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட வழங்குனரினால் பொறுத்தும் கட்டணம் என ரூபா 275,000 இற்கான விலையொன்று சமர்ப்பித்திருந்தது. பின்னர் 2025 மே 05 திகதி சமர்ப்பித்திருந்த விலை ரூபா 469,714 தொகை காணப்பட்டதனால் ரூபா 194,714 தொகை மிகையாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | எமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள காரணமாக இருந்தமையால் 15 மாதங்களுக்கு பின்னர் மின்பிறப்பாக்கி பொறுத்தும் கருமம் நிறைவேற்றல் மேற்கொள்ளப்படல், அந்த நாட்களில் (2022 மே அண்மித்த காலத்தில்) நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமையின் மத்தியில் பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலைகள் தீவிரமாக அதிகரித்திருத்தல், எரிபொருள் கட்டுப்பாடு காரணமாக தொடர்ச்சியாக மின்துண்டிப்பு ஏற்பட்டதால் மின் பிறப்பாக்கி இயந்திரத்தை விரைவாக பொறுத்தும் அவசர தேவைப்பாட்டின் காரணமாக மேற்கூறிய திருத்திய மதிப்பீட்டை அங்கீகரித்து கருமம் சாட்டப்பட்டது. அது அத்தியவசிய கருமம் ஒன்றாக இருந்தமையால் அந்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது. நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாத நிலைமை மற்றும் பண்ட விலைகள் தீவிரமாக அதிகரித்துச் செல்லல் ஆகிய விடயங்களின் மீது நிறுவனத்தினால் கோறிக்கையை கவனம் செலுத்தி அந்த மேலதிக மதிப்பீட்டிற்காக பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | பெறுமை அலுவல்கள் குறிப்பிட்ட காலப் பகுதியில் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளுராட்சி நிறுவனங்களின் பதவிக் காலம் 2023 மார்ச் 19 திகதியில் முடிவடைந்ததுடன், குறிப்பிட்ட வேட்புமனு அறிவித்தல் 2023 ஜனவரி 04 திகதி | உள்ளுராட்சி நிறுவனங்களின் பதவிக் காலம் 2023 மார்ச் 19 திகதி முடிவடைந்ததுடன், குறிப்பிட்ட வேட்புமனு அறிவித்தல் 2023 ஜனவரி 04 | தேர்தலொன்று நடாத்துவதற்காக நிறைவேற்றிக்கொள்ள செய்யப்பட வேண்டிய நிதி மற்றும் ஏனைய |

| | | | |
|---|---|---|---|
| | காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. தேர்தல் நடைபெறும் நாட்கள் மற்றும் அவற்றை இரத்துச் செய்வதற்குரிய 03 வர்த்தமானிகள் வெளியிடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட திகதியில் தேர்தலை நடாத்துவதற்கு தேர்தல் ஆணைக் குழுவிற்கு முடியாமல் போன போதிலும், தேர்தல் செலவுகள் என ரூபா 655,096,226 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 2023 செப்தம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 15,933,472 தொகை தொடர்ந்தும் செலுத்த வேண்டிய செலவுகள் என காணப்பட்டது. தேர்தல்கள் செலவுகளில் 15 சதவீதம் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளமாகவும் 23 சதவீதம் காகிதாகிகள் கொள்வனவு செய்வதற்காகவும் 07 சதவீதம் எரிபொருளுக்காகவும் 31 சதவீதம் அச்சு அலுவல்களுக்காகவும், 07 சதவீதம் உபசரிப்பு விடயங்களுக்காகவும், 04 சதவீதம் பொலிஸ் திணைக்கள செலவுகளுக்காகவும் 13 சதவீதம் ஏனைய செலவுகளுக்காகவும் செலவிடப்பட்டிருந்தது. | திகதி வெளியிடப்பட்டு உள்ளராட்சி நிறுவனங்களின் தேர்தல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் குறிக்கோள் வாக்கெடுப்பு உரியவாறு நடாத்தி 2023 மார்ச் 19 திகதிக்கு முன்னர் அங்கத்தவர்களை தெரிவு செய்து முடிவாக்குவதற்காகும். அதன்படி, வாக்கெடுப்பு நடாத்துவது தொடர்பான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அங்கு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட செலவு மேற்கொள்ளப்பட நேரிட்டது. | தேவைப்பாடுகளை நிறைவேற்றாமல் செயற்பட்ட காரணத்தினால் அரச பண விரயமொன்றாக காணப்படுவதால் அவ்வாறு எதிர் காலத்தில் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிர்மாண வேலைகள் மற்றும் திருத்த வேலைகளுக்காக ரூபா 12,556,695 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அவற்றில் வாகனத் திருத்த வேலைக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு ரூபா 5,669,850 தொகையாகும். அவற்றில் ஆணைக் குழுவிற்கு உரித்தில்லாத ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான 69 வாகனங்களின் சேவை மற்றும் திருத்த வேலைக்காக ரூபா 2,312,644 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | தேர்தல் ஆணைக்குழுவின் குறிக்கோள் உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல் நடாத்துதல் உரிய முறையில் நடாத்துதல் ஆக காணப்பட்டமையால் நிர்மாணித்தல் மற்றும் திருத்த வேலைக்காக ஐயவினாவில் குறிப்பிட்ட செலவுகள் மேற்கொள்வதற்கு நேரிட்டது. தேர்தல்கள் நடாத்துவதற்காக ஆணைக்குழுவின் வாகனங்கள் போதியளவு காணப்படாமையால் ஏனைய நிறுவனங்களில் இருந்தும் வாகனங்கள் பெற்றுக்கொள்ள நேரிட்டிருந்ததுடன், அந்த வாகனங்களின் சேவைகள் மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளவும் நேரிட்டது. | அரச நிறுவனங்களில் இருந்து வாகனங்களை பெற்றுக்கொள்ளும் போது தொழில்நுட்ப பரிசோதனையொன்றுக்கு ஆளாக்குதல் மற்றும் வாகனங்களின் திருத்த வேலைக்கான செலவுகளை மீண்டும் தீர்த்துக்கொள்வதற்கான செய்முறையொன்று தயாரித்துக்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கணினிகள், நிழற்பிரதி இயந்திரங்கள், மடிகணினிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 5,289,855 தொகை செலுத்தப்பட்டிருந்தது. தேர்தல் நடைபெறாமையால் அந்த இயந்திரங்களை உரிய நிறுவனங்களுக்கு ஒப்படைத்த போதிலும் செலவு விலைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | உள்ளூராட்சி நிறுவனங்களின் வாக்கெடுப்பு மேற்கொள்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஏடுக்கப்பட்ட கொள்கைசார் தீர்மாணங்களின் படி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் சுற்றறிக்கையின் படி வாக்கெடுப்பு நடாத்துவதற்குரிய ஆரம்ப ஏற்பாட்டலுவல்கள் மேற்கொள்வதற்கு தேவையான பெறுகை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், தலைமை அலுவலகம் உட்பட மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கு தேவையான கணினிகள், நிழல் பிரதி இயந்திரங்கள், கணினி அச்சு இயந்திரங்கள் மற்றும் மடி கணினிகள், அச்சு இயந்திரங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறுகிய காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பாரிய கடமை அலுவல்களை வசதிப்படுத்துவற்காக அலுவலகங்களுக்கு தேவைப்பாட்டுக்கு ஏற்றவாறு போதியளவாக காணப்படாமையால் இயந்திர உபகரணங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. 2023.03.09 திகதி தேர்தல் நடாத்துவதாக வெளியிடப்பட்டிருந்தமையால் இந்த கருமங்கள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால், இந்த செலவுகள் மேற்கொள்வதற்கு நேரிட்டது. | அரச நிறுவனங்களினூடாக தேவைப்பாட்டினை நிறைவேற்றிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2023 செப்தம்பர் 14 திகதிய மற்றும் F/18/2023 இலக்கம் கொண்ட தகவல்கள் பெற்றுக்கொள்ளும் கடிதத்தின் படி இந்த தேர்தலுக்காக 2023 ஜுலை 31 திகதியில் உள்ளவாறு காகிதாகிகள் செலவு ரூபா 162,911,483 தொகையாக காணப்பட்டது. அவற்றில் ரூபா 29,009,706 தொகை Toner, Ink மற்றும் Drum அவற்றிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன், கடித உறைகளுக்காக ரூபா 92,472,972 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த கடித உறைகளை மீண்டும் பயன்படுத்த முடியாத காரணத்தினால் இந்த செலவு விலை விளைவற்ற செலவொன்றாக இருந்தது. | குறிப்பிட்ட கடித உறைகளை மீண்டும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தலின் போது பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். | அரச நிதி சிக்கனமாகவும் வினைதிறனுடன் பயன்படுத்துவற்கு நடவடிக்கை எடுத்தல் |
| (உ) | கொழும்பு மாவட்டம் மற்றும் கொழும்பு நகர தேர்தல்கள் அலுவலகத்தினால் தேர்தல் கடமை அலுவல்களுக்காக அடிக்கடி நிறுவனங்களில் இருந்து வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டிருந்ததுடன், தேர்தல் அலுவல்களுக்காக ஆணைக்குழுவிற்கு தேவைப்படும் வாகன எண்ணிக்கை தொடர்பாக பூர்வாங்க திட்டமொன்று காணப்படவில்லை. மேலும் கொழும்பு நகரசார் மற்றும் கொழும்பு மாவட்ட தேர்தல் அலுவலகங்களினால் ஆரம்ப ஏற்பாட்டு அலுவல்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த வாகன தேவைப்பாட்டுத் திட்டமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். அடுத்த தேர்தல்களின் போது வாகன தேவைப்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். | தேர்தல்கள் ஆலுவல்களுக்காக தேவையான வாகன எண்ணிக்கை தொடர்பாக முன்கூட்டிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி செயற்படி வேண்டும். |

## 3.3 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 03 இற்கு இணங்க மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் முன்னைய ஆண்டு திசெம்பர் 15 திகதிக்கு முன்னர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவின் 2023 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2023 பெப்ரவரி 07 திகதியே அங்கீகாரிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் அந்தத் திட்டம் நான்கு தடவைகள் திருத்தப்பட்டிருந்ததுடன், திருத்திய திட்டத்திற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுகொண்டிருக்கவில்லை. | 2023 செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கும் போது சில பிரிவுகளில் இருந்து உரிய தினங்களில் தகவல்கள் வழங்காமையும், உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல் ஆரம்ப அலுவல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருப்பதால், குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் அங்கீகரிப்பதற்காக செய்முறை சார் சிக்கல்கள் ஏற்பட்டது. அதேபோல் காலாண்டுக்குரிய திருத்தப்பட்ட திட்டத்தின் முன்னேற்றம் நிதியமைச்சின் தேசிய பாதீட்டுத் ஆணைக்குழு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பும் போது தேர்தல் திணைக்ளம் நாயகத்தின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டுள்ளமையால் அதற்காக உரிய அதிகாரம் கிடைக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் அறிவிக்கின்றேன். | செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதற்குரிய திருத்தங்கள் குறிப்பிட்ட காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 செயல் நடவடிக்கை திட்டத்தின் சட்டப் பிரிவினால் நிறைவேற்றப்பட திட்டமிடப்பட்டிருந்த 09 கருமங்கள் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறாமையால் நிறைவேற்றுவதற்கு முடியாமல் போனதுடன், தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவின் 04 கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் நிருவாகப் பிரிவினால் ஆண்டின் போது செயற்படுத்தப்பட வேண்டிய கருமங்களை சரியாக இனங்காணாமல் ஆண்டின் போது மேற்கொண்டிருந்த கருமங்களை உள்ளடக்கி திட்டம் அவ்வப்போது திருத்தப்பட்டிருந்தது. | சட்டப் பிரிவினால் நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருந்த 09 கருமங்களில் 06 கருமங்கள் உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல் நடைபெறாமையால் அந்த இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாமல் போனதுடன், 03 கருமங்கள் ஆணைக்குழுவின் நிர்வாகத்திற்கு புறம்பாக ஏற்பட்டிருந்த பல்வேறு நிதி மற்றும் பௌதீக சிக்கல்கள் காரணமாக அவற்றை செயற்படுத்துவதற்கு முடியாமல் போன காரணத்தினால் அந்தத் தொழிற்பாடுகள் 2024 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்துவற்கு தீர்மானிக்கப்பட்டது. தகவல்கள் மற்றும் தொடர்பாடல் | செயல் நடவடிக்கை திட்டத்தில் திட்டமிடப்பட்ட கருமங்கள் சரியாக இனங்காண வேண்டியதுடன் திட்டமிடப்பட்டிருந்த கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொழில்நுட்ப பிரிவின் 04 கருமங்கள் 2024 ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ளது. | |
| (இ) | தேசிய தேர்தல்கள் பிரிவு தொடர்பான செயல் நடவடிக்கை திட்டத்தின் ஒவ்வொரு தொழிற்பாடுகளுக்குமான செயலாற்றுகை சுட்டிகள் (KPI) இனங்கண்டிருக்கவில்லை. | ஒவ்வொரு தொழிற்பாடு தொடர்பாக பிரதான செயலாற்றுகை சுட்டி (KPI) பங்குபற்றல் மூலோபாய திட்டத்தின் படி இனங்கண்டிருந்தமையால் அதனை வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தப்பட்டது. | ஒரு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு தொழிற்பாடுகளுக்குமாக செயலாற்றுகை சுட்டிகள் (KPI) இனங்காண வேண்டும். |
| (ஈ) | முறையான பரிசோதனை ஒன்றின்றி செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததால் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தங்களின் போது தொழிற்பாடுகள் எண்ணிக்கையில் பாரிய முரண்கள் ஏற்பட்டிருந்தது. மீண்டும் அந்த தொழிற்பாடுகள் வேறு பிரிவுகளுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன், சில கருமங்கள் 2024 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக தற்போது அனைத்து பிரிவுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2024 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது அவ்வாறான சிக்கல்கள் குறைவடையக் கூடியவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2023 ஆண்டில் ஏற்பட்டிருந்த பல்வேறு நிதி மற்றும் பௌதீக சிக்கல்கள் மீது பிரிவுகளுக்குரிய தொழிற்பாடுகளை செயற்படுத்துவதற்கு முடியாமல் போனதுடன், 2022 – 2025 பங்குபற்றல் மூலோபாயத் திட்டத்தின் படி நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் உள்ள தொழிற்பாடுகள் 2024 செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | முறையான ஆய்வுடன் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவிற்கு சொந்தமான 05 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது மிகவும் குறைவாக ஓடியிருந்ததுடன், அனேக சந்தர்ப்பங்களில் நிறுவன வளவில் நிறுத்தப்பட்டிருந்தது. 2022 ஒக்டோபர் மாதத்தில் அவற்றில் ஒரு வாகனத்திற்கு 05 டயர்கள் மாற்றப்பட்டிருந்ததுடன், டயர் மாற்றப்பட்ட பின்னர் 2023 | அங்கு குறிப்பிடப்பட்டிருந்தவாறு ஒரு வாகனம் 2022 ஆண்டு ஒக்தோபர் மாதத்தின் 05 டயர்கள் மாற்றப்பட்டிருந்ததுடன், 2023.12.31 திகதி வரை அந்த வாகனம் 19 கிலோமீற்றர் மாத்திரமே ஓடியிருந்தது. இந்த வாகனத்தின் திருத்த வேலைகள் அலுவல்களுக்காக 2018 ஆகஸ்ட் மாதம் முகவர் | வாகனப் பயன்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பாக சிக்கன மற்றும் செயற்திறனுடன் தீர்மானம் எடுத்தல். |

திசெம்பர் 31 திகதி வரை அந்த வாகனம் 19 கிலோமீற்றர்கள் மாத்திரமே ஓடியிருந்தது.

நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் திருத்த வேலைக்கு தேவையான உதிரிப்பாகங்கள் காணப்படாத காரணத்தினால் சுமார் மூன்ற மாத காலத்தின் பின்னர் மீண்டும் அலுவலகத்திற்கு எடுத்து வரப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் அரச நிறுவனங்களுக்கு புதிய வாகனங்கள் கொள்வனவு செய்வதை தடைசெய்து அரசினால் வெளியிடப்பட்டிருந்த ஏற்பாடுகளின் காரணமாக பழைய வாகனங்களை மீண்டும் திருத்த வேலை மேற்கொள்வதற்காக கவனம் செலுத்தப்பட்டது. அதன்படி, இந்த வாகனத்தின் பல திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிலவுகின்ற நிதி ஏற்பாடுகள் மீது இடையிடையே அந்த திருத்த வேலை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. திருத்த வேலை அலுவல்களின் பின்னர் வழமையான கடமை அலுவல்களில் ஈடுபடுத்தப்பட்டதுடன், அவ்வாறு கடமை அலுவல்களுக்கு செல்லும் போது இடைவெளியில் டயர் வெடித்திருந்தமையால் அப்போதைக்கு டயர் போடப்பட்டு 05 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்தது மற்றும் வாகனம் ஓட்டப்படாமல் இருந்தமையால் மீதியான டயர்களும் ஓட்ட நிலைக்கு தகுதியற்றவை என இயந்திரப் பொறியியலாளரினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

அதன்படி வாகனத்திற்கு புதிய ஐந்து டயர்கள் போடப்பட்டது. இந்த வாகனம் 2024 ஆண்டு முதல் கடமை அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன்.

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆணைக் குழுவின் சிரேஷ்ட மட்ட 08 வெற்றிடங்கள், மூன்றாம் மட்ட 07 வெற்றிடங்கள், இரண்டாம் மட்ட 46 வெற்றிடங்கள், ஆரம்ப மட்ட 32 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், இந்த அறிக்கை திகதி வரை ஆணைக்குழுவினால் இந்த வெற்றிடங்களை நிரப்பியிருக்கவில்லை. | வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை வழங்குமாறு உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், விரைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |